பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆணி 20 | வியாழக்கிழமை | 05.09.2024 | அதிர்வு 034

## பொலிஸ் அதிகாரியால் இரண்டு பெண்கள் சாவு

**மூன்று வயது குழந்தை படுகாயம்**

பொலிஸ் அதிகாரி ஒருவர் செலுவத்தி வந்த வான் மோட்டார் சைக்கிள் மீது மோதிய தில் இரண்டு பெண்கள் உயிரிழந்தமையு டன் மூன்று வயது குழந்தை 05

# சஜித்தால் வெல்லவே முடியாது!

## அவரை அநுரகுமார மிஞ்சி வந்துள்ளார் என்று ரணில் பகிரங்கமாகத் தெரிவிப்பு



"இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற முடியாது. சஜித் இப் போதே தோற்றுப் போயுள்ளார். அவர் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கும் காலத்தில் அவரை மிஞ்சிய வேட்பாளராக அநுரகுமார திஸா நாயக்க இருக்கின்றார். 06

## கிளிநொச்சியில் கோர விபத்து ஒருவர் பலி; இருவர் படுகாயம்



கிளிநொச்சி – ஏ 9 வீதியின் பரந் தன் பகுதியில் நேற்று இரவு வேகக் கட்டுப்பட்டை இழந்த இரண்டு மோட் டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுள்ளார். 05



மாகாண சபைகள் தேர்தல் சட்டம் நேற்று முன்தினம் மூன்றாம் திகதி நாடாளுமன்றத் துக்கு வர இருப்பதாக கூறப்பட்ட நிலையில், அதற்கு இரண்டு நாள் களுக்கு முன்னர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக் கும் முடிவை இலங்கைத் தமிழரசுக் கட்சி அவசரப்பட்டு எடுத்து, மாகாண சபைத் தேர் தல் சட்டத்தை அங்கீகரிக்கும் வாய்ப்பைக் குழப்பி விட்டது, ரணில் காலை வாரிவிட்டார் என்றெல்லாம் குறிப்பிடப்படுவது குறித்து மேலதிக விசாரணைகளை – தேடல்களை – முடுக்கி விட்டேன்.

கடந்த முதலாம் திகதி தமிழரசின் மத் திய குழுக் கூட்டத்தில் இது குறித்து கட்சி யின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் எம்.பி யும் முன்னாள் பொதுச் செயலாள ருமான துரைராஜசிங்கம் 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally




# 50 லட்சம் புதிய கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை

எதிர்வரும் 15 ஆம் திகதியளவில் புதிய பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கிய கடவுச்சீட்டுகள் நாட்டுக்குக் கிடைக்குமென குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

50 லட்சம் புதிய கடவுச்சீட்டுகளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதியளவில் அதன் முதல் தொகுதியாக 50 ஆயிரம் கடவுச்சீட்டுகள் நாட்டுக்குக் கிடைக்குமென குடிவரவு - குடியகல்வு திணைக்களம் கூறியுள்ளது.

அவை கிடைத்தவுடன் தற்போது கடவுச்சீட்டு விநியோகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு கிட்டுமென திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதுவரை நாளாந்தம் வழங்கப்படும் கடவுச்சீட்டுகளை 1000 ஆக மட்டுப் படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக திணைக்களம் கூறி யுள்ளது.

தற்போது தம்வசம் 30 ஆயிரம் கடவுச்சீட்டுகள் கையிருப்பில் உள்ளன என குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். அண்மைய நாள்களில் குடிவரவு - குடியகல்வு திணைக்கள அலுவலகத்தை அண்மித்து கடவுச் சீட்டை பெறுவதற்காக நீண்ட வரிசைகள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.




# தபால் மூல வாக்களிப்பு முதலாம் நாள் நேற்று!

எதிர்வரும் 21 ஆம் திகதி இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பின் முதலாம் நாள் நேற்று இடம்பெற்றது.

காலை 9 மணிக்கு ஆரம்பமான தபால் மூல வாக்களிப்பு மாலை 4 மணியுடன் நிறைவடைந்துள்ளது.

நாடு முழுவதும் நேற்று பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வாக்களிப்பு இடம்பெற்றது.

இதற்கமைய, பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலும் நேற்று வாக்களிப்பு இடம்பெற்றது.

அத்துடன், இன்றும், நாளையும் தபால் மூல வாக்களிப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த தினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்கு, எதிர்வரும் 11 ஆம் மற்றும் 12 ஆம் திகதிகள் வாக்களிப்பதற்கான மேலதிக தினங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தமுறை ஜனாதிபதி தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு, 7 லட்சத்து 12 ஆயிரத்து 321 அரச உத்தியோகத்தர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

# தபால்மூல வாக்களிப்பை கண்காணிப்பதற்கு தேர்தல் கண்காணிப்பாளர்கள் விசேட திட்டம்

தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க விசேட வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை முன்னிட்டு 900 இற்கு மேற்பட்ட கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனப் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நாட்டின் 22 தேர்தல் தொகுதிகளிலும் கண்காணிப்பு பணி முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தபால்மூல வாக்களிப்பை கண்காணிக்க நடமாடும் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.







# லாஃப்ஸ் எரிவாயுவின் விலையில் திருத்தம் இடம் பெற மாட்டாது!

செப்டம்பர் மாதத்தில் லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நிலவிய அதே விலையிலேயே சமையல் எரிவாயு விற்பனை செய்யப்படும் என லாஃப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோ கிராம் நிறையுடைய லாஃப்ஸ் சமையல் எரிவாயு 3,680 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன், 5 கிலோ கிராம் நிறையுடைய லாஃப்ஸ் சமையல் எரிவாயு 1,477 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் எனக் குறிப்பிட்டுள்ளது.

# பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி 15 நாள்களுக்குள் வெளியாகும்

2023 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் எதிர்வரும் 15 நாள்களுக்குள் பல்கலைக்கழகங்களுக்கான தெரிவுகளுக்குரிய வெட்டுப்புள்ளி வெளியிடப்படும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போது அந்த நடவடிக்கைகள் நிறைவடையும் தறுவாயில் உள்ளன என அதன் உபதலைவர் பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்துக்கும் அதிகமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

විශ්ව විද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
University Grants Commission

# ‘நமக்காக நாம்’ பரப்புரை நடவடிக்கை வடமராட்சி கிழக்கில் முன்னெடுப்பு









தமிழ்ப் பொது வேட்பாளரின் “நமக்காக நாம்” பிரசாரப் பயணத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் பரப்புரைப் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு, கிழக்கு முழுவதும் கிராம மட்டங்களில் பரப்புரைப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் தொடர் பரப்புரைப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பரப்புரைப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனின் சங்கு சின்னத்துக்கு ஆதரவாக வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நான்காவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டன.

# கொக்கட்டிச்சோலையில் 'நமக்காக நாம்' பரப்புரைக்கான ஒருங்கிணைப்புக் கூட்டம்





தமிழ்ப் பொது வேட்பாளரின் “நமக்காக நாம்“ பிரசாரப் பயணத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் பட்டிப்பளை பிரதேசத்தில் பரப்புரை பணிகளை முன்னெடுப்பதற்கான பரப்புரை ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனின் சங்கு சின்னத்திற்கு ஆதரவாக பொலிகண்டி முதல் பொத்துவில் வரை “நமக்காக நாம்” பிரசாரப் பயணம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டம், பட்டிப்பளை பிரதேசத்தில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கான பரப்புரைப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் பரப்புரை ஒருங்கிணைப்புக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

பரப்புரை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான மாவட்டக் குழுவினரது ஏற்பாட்டில் பட்டிப்பளை பிரதேசத்துக்குட்பட்ட 11 கிராமங்களின் பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டம் கொக்கட்டிச்சோலை அரசடித் தீவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் கலாந்துரையாடப்பட்டது.



# அரச பணியாளர்களுக்கான ஜனாதிபதியின் சம்பள அதிகரிப்பு என்பது போலி நாடகம்!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

"அரச பணியாளர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து அறிவிக்கும் அரசாங்கம், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடாத பணியாளர்களுக்கு வழங்குவதாக உறுதியளித்த கொடுப்பனவை இன்னும் வழங்க முடியாமல் இருக்கின்றது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சம்பள அதிகரிப்பு கோரி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட அரச பணியாளர்களுக்கு 10,000 ரூபாவை ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்குவதாக அரசாங்கம் ஏற்கனவே கூறியது.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபடாதவர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாத அரசாங்கம் அரச பணியாளர்களுக்கான வேதனத்தை அதிகரிப்போம் எனப் பொய்யான வாக்குறுதியை வழங்குகிறது.

எனவே, உறுதியளித்த தொகையை அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டும். அவ்வாறு வழங்க முடியாவிட்டால் தற்போதைய அரசாங்கம் அரச சேவையில் உள்ளவர்களுக்கு எதிர்காலத்தில் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது."– என்றார்.

## பொலிஸ் அதிகாரியால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யொன்று படுகாயமடைந்துள்ளது.

எப்பாவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலாவ – கெக்கிராவ வீதியில் கடியாவ சந்திக்கு அருகில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மாலுலாவ கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த 38 மற்றும் 58 வயதுடைய இரண்டு பெண்களே உயிரிழந்தவர்களாவர்.

படுகாயமடைந்த குழந்தை அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

வானைச் செலுத்தி வந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு நித்திரைக் கலக்கம் ஏற்பட்டதால், வான் வீதியை விட்டு விலகி எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தையடுத்து அனுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மேற்படி பொலிஸ் சார்ஜன்ட் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்தையடுத்த்து எப்பாவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிளிநொச்சியில் கோர..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன் மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் .

கிளிநொச்சியில் இருந்து பரந்தன் நோக்கிச் சகோதரர்கள் இருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் அதிக வேகத்தில் சென்ற நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த சகோதரர்களில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றைய சகோதரர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அத்துடன் மற்றைய மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, உருத்திரபுரத்தைச் சேர்ந்த வைகுந்தவாசன் குமணன் (வயது – 25) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுட்டிக்காட்டி இருக்கின்றார். அதையும் மீறி இந்த முடிவை – சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தை – தமிழரசு அன்று ஏன் எடுத்தது என்பதைத் தேடினேன்.

தமிழரசு கட்சி இந்தத் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிவை தெளிவாக அறிவிக்கும் வரை இந்த மாகாண சபை தேர்தல் சட்டத்தை மூன்றாவது வாசிப்புக்கு – நாடாளுமன்றுக்கு – எடுக்க வேண்டாம் என்று பிரதமர் மட்டத்திலிருந்து நாடாளுமன்ற விவகார ஒழுங்குபடுத்தல் தரப்புக்கு திட்டவட்டமான உத்தரவு வந்திருந்ததை நாடாளுமன்ற அதிகாரிகள் மட்டத்தில் இப்போது உறுதிப்படுத்தி அறிய முடிகிறது.

கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமிழரசு மத்திய குழுக் கூட்டத்தில் இந்த ஜனாதிபதி தேர்தலில் கட்சி யாரை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை எடுக்காமல் விட்டால் அல்லது தீர்மானம் எடுப்பது ஒத்திவைக்கப்பட்டிருந்தால், இந்த மாகாணசபைகள் தேர்தல் சட்டத்தை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் தள்ளிப் போடும் ஒழுங்கே நிகழ்ந்திருக்கும் என அந்த வட்டாரங்கள் நேற்று அடித்துக் கூறின.

ஏற்கனவே இந்த மாகாண சபை தேர்தல் சட்டம் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன கடுமையான சீற்றத்தில் இருந்தார் எனக் கூறப்படுகிறது. முன்னைய நாடாளுமன்றத்தில் இந்த விடயம் தொடர்பில் அவர் தலைமையில் ஒரு தெரிவுக்குழு அமைக்கப்பட்டு இந்த மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளுக்குரிய விடயங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அப்படி இருக்க, அதே விடயத்தை தனிநபர் பிரேரணை என்று சுமந்திரன் முன்வைத்து அந்தத் தேர்தலை மீளவும் நடத்தக் கோருவதற்குத் தேவையான சட்டமூலத்தை கொண்டு வந்தார் என்ற பெயரை சுமந்திரன் தட்டிச் செல்வதில் பிரதமருக்கு உடன்பாடு இல்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை, சுமந்திரனின் கட்சி எடுத்தால் மட்டுமே இந்தச்சட்ட மூலம் தொடர்பான மூன்றாவது வாசிப்புக்கு அனுமதிப்பது, இல்லையேல் அதற்கு இடம் அளிப்பது இல்லை என்று பிரதமர் உறுதியாக இருந்திருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை தமிழரசு எடுக்காதவரை, எவ்வளவு காலம் சென்றாலும் ரணிலின் அரசின் கீழ் இந்த மாகாண சபை தேர்தல் சட்டத்தை மீளக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு அடியோடு இல்லை என்பதுதான் உண்மை நிலைமை. அப்படிப் பார்த்தால் கடந்த ஞாயிறன்று இலங்கை தமிழரசு எடுத்த முடிவு அவசர குடுக்கைத்தனம் இல்லை என்றே கூற வேண்டும்.

\+ + +

பொது வேட்பாளர் விடயதில் அத்தரப்பின் காட்டில் நல்ல மழை. வெள்ளம் போடும் நிலைமை. வாக்கு மழையல்ல. வாக்குத் திரட்டும் முயற்சிக்கான நிதி திரட்டலில்தான் நல்ல மழை.

ஏற்கனவே முதல் கட்டமாக 80 லட்சம் ரூபா வரை வந்தது எனக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அதிலும் விட மூன்று மடங்கான தொகையிலும் கூடுதலாக மேலும் 10 லட்சமும் சேர்த்து, உலகத் தமிழர்கள் நன்கறிந்த தமிழ் வர்த்தக புள்ளி ஒரிரு தினங்களுக்கு முன்னர் வாரி வழங்கியிருக்கின்றார்.

ஆஸியில் ஓர் ஒளிபரப்பு நிறுவனம் தான் சேகரித்த பத்து லட்சம் ரூபாவை வழங்கி இருக்கின்றது. சேகரிப்பு 4 'C'ஐத் தாண்டி இருப்பதால் பல பொக்கட்டுகளில் நல்ல மழை என்றும் பேச்சு அடிபடுகின்றது.

கிட்டும் நிதி உதவிக்கு ஏற்ப வாக்குகளும் கிட்டினால் திருப்திதான்.....!

\+ + +

தமிழரசு ஆதரிக்கும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தைச் சந்தித்து, பிரதேச ரீதியாக தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேரடியாக – முற்கூட்டியே – விளங்கப்படுத்தும் கூட்டம் ஒன்று முதல் கட்டமாக நேற்று காலை 8 மணிக்கு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

சுமந்திரன், சாணக்கியன் எம்.பிக்களுடன் சென்று வன்னி நிலைமை குறித்து முன்னாள் எம்.பியான திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா நேரில் சஜித்திடம் விளக்கினார். வெடுக்குநாறிமலை, குருந்தூர்மலை, மகாவலி 'எல்' வலயம் போன்ற பிரச்சினைகள் குறித்துப் பேசப்பட்டு சில தீர்க்கமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன எனத் தெரிகின்றது.

இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட எம்.பி. குகதாசன் மற்றும் கலையரசன் எம்.பி. போன்றோர் இந்தக் கூட்டத்தில் மிஸ்ஸிங்.

அரசியலில் தமக்கு நெருக்கடி வரும் சமயங்களில் எல்லாம் குகதாசன் எம். பி. ஒரு தந்திரம் வைத்திருக்கின்றார். சுகவீனம் என்று போய்ப் படுத்துக் கொள்வதுதான் அது. சஜித் பிரேமதாஸவை போய் சந்திப்பதை சிறிதரன் எம்.பி. தரப்பு விரும்புமோ, என்னவோ என்று கருதிப் போலும் குகதாசன் எம்.பி. தமக்கு சுகவீனம் எனக் குறிப்பிட்டு, கட்டிலில் சுருங்கிக் கொண்டு விட்டார்.

நேற்று முன்தினம் மாலை வரை நாடாளுமன்றத்தில் மிக ஆரோக்கியத்துடன் காணப்பட்ட அவருக்கு நேற்றுக் காலை சஜித்தை சந்திக்க இருக்கையில் திடீர் சுகவீனம் வந்துவிட்டது. இப்போது எல்லாம் பிரச்சினைக்கு உரிய விடயங்கள் வரும்போது குகதாசனுக்கு சுகவீனமும் வந்து விடுகின்றது.

வயது போய் தளர்ந்த சம்பந்தன் போல இப்போது அவரது இடத்துக்கு, பிரச்சினை என்றதும் சீக்காளியாகி நோயில் படுத்து விடும் பிரதிநிதி வந்திருக்கின்றார் போலும். அவருக்கு இன்னொரு ஐந்து ஆண்டுகள் எம்.பி. பதவி வழங்குவது சம்பந்தனுக்குக் கடைசி காலத்தில் எம். பி. பதவியை வழங்கியதற்கு ஒப்பாக போகும் என்றுதான் படுகிறது.

அரசியலில் அடிக்கடி சுகவீனம் என்கிறவர்கள் அரசியலைத் தொடர்ந்து அடுத்து வருபவருக்கு வழி விடுவது தான் நல்லது முறை.

இது குதாசனுக்கும் பொருந்தும், அவரது கட்சியின் தலைவருக்கும் கூட பொருந்தும்தான்....!

## சஜித்தால் வெல்லவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நல்லாட்சி அரசு இருந்த காலத்தில் கூட அநுரகுமார அந்த அரசுடன் இணைந்தே செயற்பட்டார். ஆனால், இன்று அநுர சஜித்தை மிஞ்சி வந்துள்ளார். சஜித் செய்யும் சில முட்டாள்தனமான செயற்பாடுகள் அநுரவுக்குச் சாதமாக அமைந்துள்ளன."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மஹியங்கனை பொது விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இன்று (நேற்று) தபால் வாக்களிப்புக்கள் ஆரம்பித்துள்ளன. நல்ல செய்தி கிடைத்திருக்கின்றது. இரு வருடங்களுக்கு முன்பாக இப்படியொரு தேர்தலை நடத்தும் வாய்ப்பு இருக்கவில்லை. சிலர் நாடாளுமன்றத்தை முடக்க வந்தனர். அதற்குச் சந்தர்ப்பம் அளிக்காமல் அவர்களை வெறும் கையோடு திருப்பி அனுப்பினோம்.

மருந்து, எரிபொருள்,எரிவாயு வரிசைகள் இருந்தன. எவருமே ஏற்க இயலாது என்று சொன்னபோது, 'இயலும் ஸ்ரீலங்கா' என்று சொல்லி நாங்கள் பணிகளை ஆரம்பித்தோம். இன்று நல்ல நிலைத்தன்மை கிட்டியுள்ளது. அன்று தட்டுப்பாடாக இருந்த பொருட்கள் இன்று கிடைக்கின்றன. பொருட்களின் விலையும் குறைந்து வருகின்றன.

நாட்டில் புதிய பொருளாதாரத்தைக் கட்டமைக்க வேண்டியுள்ளது. மக்கள் பட்ட கஷ்டங்களை நான் அறிவேன். பொருட்களின் விலைகளை இன்னும் குறைக்க வேண்டும். இதனைச் செய்யவே தேர்தலை நடத்துகின்றோம். இந்தத் தேர்தல் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதாக அமையும். நாம் எந்த வழியில் செல்லப் போகின்றோம் என்பதைத் தீர்மானிக்கலாம்.

இந்த நாட்டில் நாம் ஆரம்பித்த பயணம் எதிர்காலத்திலும் தொடர வேண்டும். மக்களுக்குக் கஷ்டம் இருப்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஒரே அடியில் சரிந்த பொருளாதாரத்தை மீட்க முடியாது. சர்வதேசத்தின் உதவி எமக்கு இருக்கின்றது.

அதனைக் கொண்டு வாழ்க்கைச் சுமையை குறைக்கவும், தொழில் வாய்ப்புக்களை பலப்படுத்தவும், வரி சுமையைக் குறைக்கவும், 'உறுமய', 'அஸ்வெசும' போன்ற மக்களுக்கான நிவாரணத் திட்டங்களைப் பாதுகாக்க வேண்டும்.

நாட்டைப் பொறுப்பேற்றதன் பின்னர் முதல் அடியாக குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்கினோம். இன்னும் அதிகமானவர்களுக்கு அந்த நிவாரணம் கிடைக்கும். விவசாயிகளுக்கு நன்றிக்கடன் செலுத்தும் முகமாகவே அதனை செய்தோம்.

பின்னர் விவசாயிகளுக்கான உரத்தைப் பெற்றுக்கொடுத்து நல்ல விளைச்சலை கோரினோம். விவசாயிகள் தந்த ஆதரவினால் நாட்டை முன்னேற்ற முடிந்தது. இனிவரும் நாட்களில் வரிச்சுமையைக் குறைப்போம். விவசாய துறையை மேலும் பலப்படுத்துவோம். மக்களுக்கு காணி உறுதிகளைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சிகளையும் தொடர்வோம்.

இங்கு மாதுறுஓய போன்ற திட்டங்களை ஆரம்பித்த காலத்தில் 07




# நோர்வூட்டில் பாடசாலைக்குச் சென்ற 4 தமிழ் மாணவர்களைக் காணவில்லை

பாடசாலைக்குச் சென்ற நான்கு தமிழ் மாணவர்கள் காணாமல்போயுள்ளனர் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு மாயமான மாணவர்கள் சென். ஜோன் டில்லரி தமிழ் வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவர்கள் என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

தனஞ்செயன் கஜரூபன், சுப்பிரமணியம் தனுஸ்கர், பார்த்தீபன் தியோஜன் மற்றும் அனுஜன் ஆகிய நான்கு மாணவர்களே காணாமல்போனவர்களாவர்.

காணாமல்போன மாணவர்களில் ஒருவரான அனுஜனின் தந்தை நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் சம்பவம் தொடர்பில் முறைப்பாடளித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் நோர்வூட் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் மாணவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## சஜித்தால் வெல்லவே...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களுக்குக் காணி உறுதிகள் கிடைக்கவில்லை. சுமார் 85 வருடங்களுக்கும் மேலாக மக்களுக்கு காணி உறுதிகள் கிடைத்திருக்கவில்லை. அதனாலேயே தற்போது மக்களுக்கான உரிமைகளை வழங்குகின்றேன். இனிவரும் காலங்களில் விவசாய நவீனமயமாக்கல் பணிகளையும் முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். அதனால் எதிர்காலத்தில் உலகின் பெருமளவானோரின் உணவுத் தேவையை நாம் பூர்த்தி செய்ய முடியும்.

எதிர்காலத்தில் விவசாய உற்பத்திகளை அதிகபடுத்தினால் யார் முன்னேறப் போகின்றார்கள்? இன்று வீட்டில் போய் கண்ணாடியைப் பாருங்கள். யார் முன்னேறுவர் என்பது தெரியும். மற்றைய கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிவாரணங்கள் மக்கள் வறுமையைத் தக்க வைப்பதாக அமையும். ஆனால், நாம் மக்களை அடுத்த கட்டத்துக்கு கொண்டுச் செல்வதற்காக திட்டங்களைக் குறிப்பிட்டிருக்கின்றோம்.

தேயிலையைப் போன்றே மற்றைய விளைச்சல்களையும் ஏற்றுமதியை இலக்கு வைத்து மேற்கொள்ள வேண்டும். எனவே, பழைய வாத்திம் வாசிப்பவர்களை விட்டுவிடுங்கள். அடுத்த வருடத்திலிருந்து நாம் ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவோம். ஸ்மார்ட் விவசாயம் செய்யவும் நிவாரணங்களை வழங்குவோம். மேலும் ஐம்பதாயிரம் பேருக்கு வெளிநாட்டு தொழில்களுக்கான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள 50 ரூபாய் கொடுப்பனவையும் வழங்குவோம்.

இளையோருக்கு எவ்வாறான தொழில் வாய்ப்புக்களை வழங்கப் போகின்றார்கள் என்பது பற்றி மற்றைய கட்சிகள் கூறவில்லை. அதற்காக அவர்களிடம் நல்ல திட்டம் இருப்பதை காட்டினால் அவர்களுக்குப் பரிசு கொடுப்பேன்.

இன்று இந்தக் கூட்டம் நடக்கும் மஹியங்கனை ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி ஆசனமாகும். இன்றைய நிலையில் சஜித் பிரேமதாஸவால் அநுரகுமார திஸாநாயக்கவைத் தோற்கடிக்க முடியாது. இலங்கையில் ஒவ்வொரு முறையில் ஜனாதிபதித் தேர்தல்களின் போது இது வேட்பாளர்களுக்கு மட்டுமே முக்கிய இடமிருக்கும். நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்திலும், மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்திலும் மற்றுமொரு எதிர்க்கட்சிக்கு நாங்கள் இடமளிக்கவில்லை.

அந்தவகையில் சஜித் பிரேமதாஸ இப்போதே தோற்றுப் போயுள்ளார். அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் காலத்தில் அவரை மிஞ்சிய வேட்பாளராக அநுரகுமார திஸநாயக்க இருக்கின்றார். நல்லாட்சி அரசு இருந்த காலத்தில் கூட அநுரகுமார அந்த அரசுடன் இணைந்தே செயற்பட்டார். ஆனால், இன்று அநுர சஜித்தை மிஞ்சி வந்துள்ளார். சஜித் செய்யும் சில முட்டாள்தனமான செயற்பாடுகள் அநுரவுக்குச் சாதமாக அமைந்துள்ளன. எனவே, ஐக்கிய தேசியக் கட்சியை முன்னோக்கி கொண்டு வந்த தலைவர்களின் பணியை இன்று நானே ஆற்றுகின்றேன் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதனால் எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது. உங்கள் விவசாயமும் பாதுகாக்கப்படாது." – என்றார்.

# இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி உள்நுழைந்த 4 இந்திய மீனவர் கைது!





(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 4 இந்திய மீனவர்கள் நேற்று மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்பரப்புக்குள் ஒரு படகில் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நால்வரும் மீன்பிடிக்குப் பயன்படுத்திய படகுடன் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு நேற்று இரவு கொண்டு வரப்பட்டனர்.

அவர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் இன்று ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

# 10 ஆயிரம் ரூபா பணத்துக்காக வயோதிபப் பெண் படுகொலை!

பத்தாயிரம் ரூபா பணம் கேட்டு 76 வயது பெண்ணின் காதணிகளைக் கொள்ளையடித்து கழுத்தை நெரித்துக் கொலை செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று கொட்டாவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைமடு, நவகத்தேகம பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டார்.

கொலையுண்ட பெண்ணின் மகளின் கணவருக்குச் சொந்தமான வியாபாரத்தில் தொழிலாளியாகப் பணியாற்றியவரே கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த பெண் மாத்திரம் வீட்டில் தங்கியிருந்தபோது மேற்படி நபர் வீட்டுக்குச் சென்று அவரிடம் பத்தாயிரம் ரூபா பணம் கேட்டுள்ளார். தருவதற்கு இவ்வளவு பெரிய தொகை இல்லை என்று கூறியதால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.



கொட்டாவ, மாலம்பே வீதி இலக்கம் 720 இல் வசிக்கும் டொன லீலா அபேரத்ன என்ற 76 வயதுடைய பெண்ணே கொலை செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

# வீடு புகுந்து வாள்வெட்டு! இளைஞர் ஒருவர் காயம்!!

யாழ்ப்பாணத்தில் வீடொன்றுக்குள் புகுந்த குழுவினர் நடத்திய வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடிப் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாவடி தெற்கு பத்திரகாளி கோயில் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் இரவு வேளையில் உள் நுழைந்த மர்மநபர்கள், இளைஞர் மீது வாள்வெட்டை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 22 வயதான இளைஞர் கையில் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்

நான்கு பேர் கொண்ட குழுவே இந்தத் தாக்குதலை மேற்கொண்டது என்று பாதிக்கப்பட்ட இளைஞர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் கடந்த வருடம் மேற்படி இளைஞர்



மீதும் அவரின் தாயார் மீதும் வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வாள்வெட்டுத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது என்பது தொடர்பில் இதுவரை தெரியவராத நிலையில், மேலதிக விசாரணைகளைச் சுன்னாகம் குற்றத் தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## போசாக்கின்மையை அடியோடு ஒழிப்போம்!

இலங்கையில் சிறுவர்கள் மந்த போசனை நிலைமையால் வாடுகின்றனர். நாட்டில் சிறுவர்கள் மத்தியில் மந்த போசனை நிலைமை அதிகரித்துக் காணப்படும் நிலையில், அரசாங்கத்திடம் போசனைக் கொள்கை திட்டம் ஒன்று இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்வின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் கைக்குழந்தைகள் மற்றும் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளில் நிறை குறைவான மற்றும் வளர்ச்சி குறைவான குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்தச் சிக்கலுக்குப் பின்னரான ஆய்வுகளின்படி வீடுகளில் நான்கில் ஒரு பங்கினர் நடுத்தரமான அளவில் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கி வருகின்றனர் என்பது புலனாகியுள்ளது. ஐந்து வயதுக்கு குறைந்த குழந்தைகளின் வளர்ச்சி குறைபாடு (உயரம் குறைவு) 19.3 ஆக உயர்வடைந்துள்ளது என்று சுட்டுகின்றார் சஜித் பிரேமதாஸ.

இது கடந்த ஆண்டை விட 9.2 வீதத்தால் அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டு இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தேசிய ஊட்டச்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்து கணக்கெடுப்பின் பிரகாரம் 5 முதல் 18 வயதுக்குட்பட்டவர்களில் இது 37.4 வீதமாக உள்ளது. அல்லது 10-17 வயதுக்குட்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் வளர்ச்சி குன்றியவர்களாக (கட்டையான) அல்லது அதிக எடை கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள் என்றார் அவர்.

இலங்கையில் போசனைக் குறைபாடுகளுக்கு பல காரணங்கள் இருக்கின்றன. இந்த சிக்கலான நிலையலும் அரசாங்கத்திடம் போசனைக் கொள்கை திட்டம் ஒன்று இல்லை. இந்த இலக்கைப் பூரணப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் அவசியமாகும். இதனை கண்காணிப்பதற்கான முறையொன்றும் இருக்க வேண்டும் என்றார் அவர்.

இலங்கையில் சிறுவர் மந்த போசனை அதிகமாகவுள்ளதாக 2022 இல் யுனிசெவ் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையை இலங்கை சுகாதார அமைச்சு அப்போது நிராகரித்திருந்தது. அந்த ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட தரவுகள் திருப்திகரமானவையாக இல்லை என்றும் சுகாதார அமைச்சு அப்போது தெரிவித்திருந்தது.

ஆனால் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய தேசிய அளவிலான கணக்கெடுப்பின்படி, குழந்தைகளின் வளர்ச்சி குன்றிய நிலை 13.2 சதவீதமாக குறைந்துள்ளதுடன், தற்போது அது 12.1 ஆக குறைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏனைய நாடுகளைப் போன்று இந்நாட்டில் சிறுவர்கள் உயிரிழக்கும் மற்றும் நோய்களுக்கு ஆளாகும் அபாயம் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும், மராமஸ், குவோஷியோகர் போன்ற கடுமையான போசாக்குக் குறைபாடுகள் எதுவும் இல்லை எனவும் சுகாதார செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயினும், போசாக்கு மிக்க - வலிமையான - தேகாரோக்கியமான - எதிர்கால சமுதாயத்தை நாடு உருவாக்க வேண்டுமானால் போசாக்கின்மையை ஒழிப்பதற்கான ஒரு முறைமையை நாடு தேட வேண்டும்.

நாட்டின் பொருளாதார நிலைமை சீரடைந்து நாடு வளம் பெற்றால் மட்டுமே ஆரோக்கியமான சமூகக் கட்டமைப்பை ஏற்படுத்த முடியும்.

# குஜராத்தில் வெள்ளப்பெருக்கு; பலி எண்ணிக்கை அதிகரிப்பு



இந்தியா – குஜராத்தின் கட்ச் அருகே அரபிக்கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாகக் கடந்த சில நாள்களாகக் கனமழை பெய்து வந்தது.

இதனால் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ளத்தில் சிக்கிய சுமார் 1,200 பேர் மீட்கப்பட்டுப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இதேவேளைக் குஜராத்தில் பெய்த கனமழையில் சிக்கிப் பலியானோர் எண்ணிக்கை 49 ஆக அதிகரித்துள்ளது.

இதில் மின்னல் தாக்கியும், சுவர் இடிந்து விழுந்தும், வெள்ளத்தில் மூழ்கியும் பலர் பலியாகியதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெள்ளத்திலிருந்து சுமார் 37 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என இந்திய பேரிடர் மீட்புக்குழு தெரிவித்துள்ளது.

# மணிப்பூர் மக்களை பாதுகாப்பதில் மோடி தோல்வி அடைந்துவிட்டார்

## கார்கே குற்றச்சாட்டு



மணிப்பூர் மக்களை பாதுகாப்பதில் பிரதமர் நரேந்திர மோடி, மோசமாக தோல்வி அடைந்துவிட்டார் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியை குற்றம் சாட்டி மல்லிகார்ஜுன கார்கே, தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“மணிப்பூர் மாநிலம் வன்முறையில் மூழ்கி 16 மாதங்கள் ஆகின்றன. ஆனால் உங்கள் “இரட்டை இயந்திரம்” அரசாங்கம், அதனைத் தணிக்க எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அமைதி திரும்ப, இயல்புநிலையை உறுதிப்படுத்த அனைத்து சமூக மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவது முக்கியம். ஆனால், அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மணிப்பூர் முதல்வரை நீங்கள் ஏன் இன்னும் பதவி நீக்கம் செய்யவில்லை? அரசு இயந்திரத்தை கிட்டத்தட்ட முடக்கி, அருவருப்பான அறிக்கைகளை வெளியிட்ட குற்றவாளி அல்லவா அவர்? பதவி நீக்கம் நடந்துவிடாமல் தடுக்கும் நோக்கில், வெட்கமின்றி இராஜினாமா நாடகம் நடத்தியவர் அல்லவா அவர்?

நீங்கள் ஏன் இவ்வளவு இரக்கமற்று இருக்கிறீர்கள்? மணிப்பூருக்கு இதுவரை நீங்கள் செல்லாதது குறித்து ஏன் கவலைப்படாமல் இருக்கிறீர்கள்? உங்கள் ஈகோ காரணமாகவே, மணிப்பூரில் அனைத்து சமூக மக்களும் பாதிக்கப்படுகின்றனர். திறமையற்ற, வெட்கமற்ற உங்கள் அரசால், அடிப்படையான சமாதான நடவடிக்கையை கூட தொடங்க முடியவில்லை.

இம்பால் மேற்கு மாவட்டத்தில் இப்போது ட்ரோன் மூலம் குண்டுவெடிப்பு நடந்துள்ளது. மத்திய உள்துறை அமைச்சர் ஆழ்ந்து தூங்குவது போல் தெரிகிறது. உங்கள் சொந்த பா.ஜ.க. தலைவர்கள் மற்றும் அவர்களின் வீடுகள் கூட தாக்கப்படுகின்றன. நிவாரண முகாம்களின் மோசமான நிலைமைகளுக்கு எதிராக குரல் எழுப்பியதால்தான் மாநில ஆளுநர் நீக்கப்பட்டாரா?

குறைந்தது 235 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஏராளமானோர் காயமடைந்துள்ளனர். 67,000 மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் பரிதாபமான நிலையில், நிவாரண முகாம்களில் தொடர்ந்து தவித்து வருகின்றனர்.

உள்நாட்டுக் கொந்தளிப்பைத் தவிர, இப்போது மணிப்பூரின் எல்லைகளில் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலும் பெரிய அளவில் உள்ளது. மணிப்பூர் மக்களைப் பாதுகாப்பதில் நீங்கள் மோசமாகத் தவறிவிட்டீர்கள். இந்திய மக்களுக்கு நீங்கள் செய்த துரோகங்களின் நீண்ட பட்டியலில், மணிப்பூர் கொந்தளிப்பு முக்கியமானது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# உக்ரைன் வெளிவிவகார அமைச்சர் டிமிட்ரோ குலேபா பதவி விலகினார்


உக்ரைன் வெளிவிவகார அமைச்சர் டிமிட்ரோ குலேபா பதவி விலகியுள்ளார்.

அவரது பதவி விலகல் குறித்த அறிவிப்பை அந்த நாட்டு நாடாளுமன்ற சபாநாயகர் ருஸ்லான் ஸ்டீபன்சுக் நேற்று வெளியிட்டார்.

அத்துடன், வெளிவிவகார அமைச்சரின் பதவி விலகல் தொடர்பில், சட்டமியற்றுபவர்களினால் விரைவில் விவாதிக்கப்படும் எனவும் அந்த நாட்டு நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி அரசாங்கத்தில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அமைச்சரவை அமைச்சர்கள் பலருடன் இணைந்து உக்ரைனின் வெளிவிவகார அமைச்சரும் பதவி விலகியுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# உக்ரைனில் ரஷ்யா மேற்கொண்ட தாக்குதலில் 51 பேர் உயிரிழப்பு




உக்ரைனின் மத்திய பகுதியில் உள்ள பொல்டாவா நகரில் ரஷ்யா மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் 51 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 271 பேர் காயமடைந்துள்ளனர்.

இராணுவ நிறுவகம் ஒன்றின் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் இதன்போது அருகிலிருந்த வைத்தியசாலை ஒன்றும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்கான எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்ட போதிலும் அங்கிருந்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு போதுமான நேரம் இருக்கவில்லை என உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்துள்ள உக்ரைன் ஜனாதிபதி வௌாடிமீர் ஜெலென்ஷ்கி, ரஷ்யாவுக்குப் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நீண்டதூர ஏவுகணை தாக்குதல்களை நடத்தித் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வான் பாதுகாப்பு கட்டமைப்புகளுக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# ஒலிம்பிக் மரதன் ஓட்ட வீராங்கனை மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்த காதலன்




உகாண்டாவை சேர்ந்த ஒலிம்பிக் மரதன் ஓட்டப்பந்தய வீராங்கனையான ரெபேக்கா செப்டேகி மீது அவரது காதலன் தீ வைத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவர் படுகாயமடைந்த நிலையில் கென்யாவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரெபேக்கா செப்டேகி பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் கலந்துகொண்டு நாடு திரும்பிய நிலையில் கென்யாவின் டிரான்ஸ் நசோயா பகுதியிலுள்ள அவரது வீட்டில் ஓய்விலிருந்துள்ளார்.

இந்த நிலையில், அவரது வீட்டில் வைத்து ரெபேக்காவுக்கும் அவரது காதலனுக்கும் இடையில் வாக்குவாதம் எழுந்தபோது ரெபேக்கா மீது அவர் பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ளார்.

இதனால் அவருக்கு 75 சதவீத தீக்காயங்கள் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# வடகொரியாவில் வெள்ளத்தை தடுக்கத் தவறிய 30 அதிகாரிகளுக்கு மரண தண்டனை விதிப்பு



வடகொரியாவில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் ஏற்பட்ட பாதிப்புகளைத் தடுக்கத் தவறிய 30 அதிகாரிகளுக்கு மரண தண்டனை விதித்து அந்நாட்டு தலைவர் கிம் ஜங் உன் உத்தரவிட்டார்.

இந்த அனர்த்தங்களால் விவசாய நிலங்கள், அரச கட்டடங்கள், வீதிகள் மற்றும் தொடருந்து பாதைகள் என அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கின.

இந்த பாதிப்புகளில் சிக்கி 4,000 பேர் உயிரிழந்துள்ளனர் என கூறப்படுகிறது.

வடகொரியாவின் வடமேற்கு பகுதிகளில் உள்ள நகரங்களின் அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட ஜனாதிபதி, அவ்விடங்களை மீண்டும் புனரமைக்கப் பல மாதங்கள் ஆகும் என்று தெரிவித்தார்.

மேலும் வெள்ளம் பாதித்த பகுதிகளிலிருந்து மீட்கப்பட்ட 15,400 பேருக்குத் தலைநகர் பியோங்யாங்கில் அந்நாட்டு அரசாங்கத்தினால், தற்காலிக தங்குமிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வெள்ள பாதிப்புகளைத் தடுக்கத் தவறிய அதிகாரிகளைக் கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி கிம் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், அவரின் உத்தரவுப்படி கடந்த மாத இறுதியில் ஊழல் மற்றும் கடமைகளைச் செய்யத் தவறிய 30 அதிகாரிகள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

எனினும் இந்த தகவலைச் சுயாதீன வட்டாரங்கள் உறுதிப்படுத்தவில்லை.

கொல்லப்பட்ட அதிகாரிகள் யார் என்பது குறித்த விபரங்கள் இன்னமும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.






# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் மேலும் அதிகரிப்பு

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்பு டைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,095 ஆக அதிகரித்துள்ளதாகத் தேர்தல் கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஜுலை மாதம் 31 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியி லேயே இந்த முறைப்பாடுகள் பதிவாகி யுள்ளன.

அதேநேரம் நேற்று முன்தினம் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 154 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள் ளது.



# பியூமாவிற்கு விளக்கமறியல்

திட்டமிடப்பட்ட குற்றக்கும்பல் உறுப்பினரான பியூமா எனப்படும் பியும் ஹஸ்திக எதிர்வரும் 18 ஆம் திகதி வரை மீள விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று கோட்டை நீதிவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டபோது இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பியூமா எனப்படும் பியும் ஹஸ்திக கடந்த பெப்ரவரி மாதம் டுபாயில் கைதானார்.

இதனையடுத்து கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று டுபாய்க்கு சென்று விமானம் மூலம் அவரை நாட்டுக்கு அழைத்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கெஹலிய ரம்புக்வெல்ல தாக்கல் செய்த மனுவின் மீதான உத்தரவு ஒத்திவைப்பு!

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான உத்தரவை, மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபின் ஊசி மருந்தை இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பான வழக்கு நிறைவடையும் வரையில், தம்மை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த



உத்தரவை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி, கெஹலிய ரம்புக்வெல்ல மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மேற்படி மனு மீதான உத்தரவை நேற்று பிறப்பிப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் அறிவித்திருந்தது. எனினும், அந்தத் தீர்மானத்தை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி அறிவிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் நேற்றுத் தீர்மானித்துள்ளது.





# தம்பலகமம் 98 ஆவது கொலனியில் வீடு ஒன்று முற்றாக எரிந்து நாசம்!

(எச் எம் ஹலால்தீன் )

தம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 98 ஆவது கொலனியில் வீடொன்று முழுமையாக தீப்பிடித்து எரிந்துள்ளது.

இச்சம்பவம் நேற்றுக் காலை ஆறு மணி அளவில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மின்சாரம் ஒரு சில மணி நேரம் தடைப்பட்டு இருந் ததனால் வீட்டார்கள் மெழுகுதிரியை வெளிச்சத்திற்காக ஏற்றி உள்ளனர்.

காலையில் எழுந்து வீட்டார்கள் தமது பிள்ளைகளை உறவினரிடம் அனுப்பி விட்டு கணவன், மனைவி இருவரும் கதவை மூடிவிட்டு பாடசாலைக்கு சென் றுள்ளனர்.

இரவு ஏற்றி வைத்த மெழுகு திரியை அணைக்க மறந்து விட்டார்கள். மெழுகு திரி நிலத்தில் விரித்து வைக்கப்பட்ட காபெட்டில் தீப்பிடித்து வீடு முழுவதும் எரிந்து நாசமாகி உள்ளது.

அருகில் உள்ளவர்கள் அணைக்க முற்பட்ட போதிலும் அணைக்க முடியாது வீடு முழுவதும் எரிந்து விட்டது.

இதனால் பெறுமதி வாய்ந்த வீட்டு உபகரணங்கள், தளபாடங்கள் அனைத் தும் எரிந்து நாசமாகி உள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக தம்பலகமம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரகைளை தம்பலகமன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# மன்னார் நீதிமன்றத் தொகுதி தாக்கப்பட்ட வழக்கில் 4 குற்றவாளிகளுக்கு 66 மாதங்கள் கடூழியச் சிறை

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் நீதிமன்றத்தைத் தாக்கிய வழக்கில் 53 சந்தேக நபர்களில் 47 சந்தேக நபர்கள் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் நான்கு சந்தேக நபர்கள் ஒன்பது குற்றங்களுக்கு குற்றவாளிகளாகக் காணப்பட்டு அவர்களுக்கு ஒன்பது குற்றங்களுக்கும் 66 மாதங்கள் கடூழிய சிறைத் தண்டனையும் இரண்டு லட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் 53 நபர்களுக்கு எதிராக மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பின் இவ்வழக்கானது 2013 ஆம் ஆண்டு மன்னார் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 12 வருடங்களாக இவ்வழக்கு இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில் கடந்த 28.08.2024 புதன் கிழமை இவ்வழக்கு மன்னார் மேல் நீதிமன்றில் நீதிபதி எம்.எம்.மிஹால் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபர்களாக காணப்பட்டவர்களில் 53 சந்தேக நபர்களில் 04 சந்தேக நபர்களை குற்றவாளிகளாக மன்று தீர்ப்பளித்தது.

ஏனைய சந்தேக நபர்களில் இரண்டு பேர் மரணித்திருந்த நிலையில் ஏனைய 47 பேரும் இவ்வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர்.

குற்றவாளிகளாகக் காணப்பட்ட நான்கு பேருக்கும் தண்டனைத் தீர்ப்பு வழங்குவதற்காக அவர்களை நேற்றைய திகதி வரை விளக்கமறியலில் வைக்க அன்றைய தினம் மன்று கட்டளை பிறப்பித்திருந்த நிலையில் நேற்று புதன்கிழமை இந்த வழக்கு மீண்டும் மன்னார் மேல் நீதிமன்றில் நீதிபதி எம்.எம்.மிஹால் முன்னிலையில் தண்டனைத் தீர்ப்புக்காக அழைக்கப்பட்டது.

இதன்போது குற்றவாளிகளாக காணப்பட்ட 20,22,31 மற்றும் 42 ஆகிய எதிரிகளுக்கு ஒன்பது குற்றங்களுக்கு தண்டனைகள் விதிக்கப்பட்டன.

இவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களில் முதலாவது குற்றம் சட்ட விரோதமாக கூட்டத்தை கூட்டியமை –

அடுத்து, இரண்டிலிருந்து ஒன்பது வரை பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை – அதாவது மேல் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்கு சேதம் விளைவித்தமை –

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்குச் சேதம் விளைவித்தமை, மன்னார் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிக் கிளைகள் தாக்குதலுக்கு உள்ளாக்கியமை, பஸ்களைத் தாக்கியமை, முருங்கன் நீர்ப்பாசன பொறியியலாளரின் வாகனத்தைத் தாக்கியமை, மன்னார் மாவட்ட நீதிமன்றக் காணியில் தரித்து வைக்கப்பட்டிருந்த இரண்டு லொறிகள் தாக்கப்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுகள் ஆகும்.

இதற்கு அமைவாக இந்த நான்கு பேருக்கும் இந்த குற்றங்களுக்காக தீர்ப்பு வழங்குவதற்கு முன் நேற்று புதன்கிழமை மன்றில் எதிரிகள் சார்பாக முன்னிலையாகி இருந்த சட்டத்தரணிகள் எதிரிகளுக்கு தண்டனைத் தணிப்பு சம்பந்தமாக விண்ணப்பங்களை மன்றில் முன் வைத்தனர்.

இதைத் தொடர்ந்து நீதிபதி தனது தீர்ப்பில் இந்த வழக்கில் எதிரிகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனை விதிக்கப்படல் உசிதமல்ல, இந்தக் குற்றச் செயல்களுக்கு சமூகத்துக்கு படிப்பினையாக அமையும் வகையில் மற்றும் சமூக நலனை மேம்படுத்தும் வகையில் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதற்கு அமைவாக முதலாவது குற்றச்சாட்டுக்கு நான்கு பேருக்கும் ஆறு மாதம் கடூழிய சிறைத் தண்டனையும் 25 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டதுடன் தண்டப்பணம் செலுத்தத் தவறின் மூன்று மாதம் சிறைத் தண்டனையும் –

இரண்டாவது குற்றச்சாட்டுக்கு 18 மாதங்கள் கடூழிய சிறைத் தண்டனையும் 40 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தண்டப்பணம் செலுத்தத் தவறின் ஆறு மாதம் சிறைத் தண்டனையும் –

மூன்றாவது குற்றச் சாட்டுக்கு 18 மாதங்கள் கடூழிய சிறைத் தண்டனையும் 40 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தண்டப்பணம் செலுத்தத் தவறின் ஆறு மாதம் சிறைத் தண்டனையும் –

மேலும் நான்கிலிருந்து ஒன்பது வரைக்குமான குற்றச்சாட்டுகளுக்கு நான்கு மாதங்கள்படி கடூழிய சிறைத் தண்டனையும் 25 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், தண்டப் பணம் செலுத்த தவறின் மூன்று மாதங்கள் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் அனைத்துத் தண்டனைகளுக்கும் மொத்தமாக 66 மாதங்கள் கடூழிய சிறை தண்டனை அனுபவிக்க வேண்டியவர்களாகவும் இரண்டு லட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டியவர்களாகவும் இக்குற்றவாளிகள் ஒவ்வொருவரும் உள்ளனர்.



# மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்துக்கு ஆப்பு வைத்தமை ரணிலின் முறையற்ற செயல்தான்

## மன்னாரில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கடும் கண்டனம்

சுமந்திரன் எம்.பி.கொண்டுவந்த மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் அங்கீகாரம் அளித்து விட்டு, பின்னர் தமக்கு சுமந்திரனின்கட்சிஆதரவளிக்கவில்லை என்றதும் நாடளுமன்ற நிகழ்ச்சி நிரலிலிருந்து அந்தத் தேர்தல் சட்ட மூல விடயத்தை நீக்கச் செய்திருப்பதன் மூலம் நாடாளுமன்றத்தின் நடைமுறைகளை மீறச் செய்துள்ளார் ஜனாதிபதி என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விசனம் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து மன்னாரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு. அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

மன்னார், வவுனியா பிரதேசங்களில் இனப்பிரச்சினை உக்கிரமடைந்து, ஆயுத கலாசாரத்தின் தாக்கம் இரு சிறுபான்மைச் சமுதாயங்களுக்கிடையிலும் முரண்பாடுகளைத் தோற்றுவித்த போதும், இந்த மண்ணில் ஜனாதிபதித் தேர்தல் வரும்போது தான் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒருமித்து வாக்களிக்கும் சந்தர்ப்பம் வருகின்றது.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தல் வந்தால் பிரதிநிதிகளை தனித்தனியாக தெரிவு செய்கின்ற போட்டிக்குப் போய்விடுவோம். வெவ்வேறு அணிகளிலிருந்து போட்டியிடுவோம். ஆனால்,ஜனாதிபதித் தேர்தல் இரண்டு சமூகங்களும் ஒருமித்து வாக்களிக்கும் சந்தர்ப்பத்தைத் தந்துள்ளது.

இந்த முறையும் இந்தவாய்ப்பு இல்லாமல் போய் விடுமோ என்ற அச்சம் நிலவிய போதும், தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தினால் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒருமித்து வாக்களிக்கும் வாய்ப்பும் வந்துள்ளது.

இம்முறையும் தனித்து தமிழ் வேட்பாளரை நிறுத்தியிருந்த செய்தி வந்திருந்த போதும் நாட்டின் நிலைவரத்தை கவனத்தில் கொண்டு எல்லோரும் ஒற்றுமைப்பட்டு, நாட்டின் அடுத்த கட்ட அரசியலை தீர்மானிக்கின்ற இந்த முக்கியமான கட்டத்தை நாங்கள் வீணாக விரயம் செய்து விடாமல் ஒருமித்து ஒரு தெரிவைச் செய்வதன் மூலம் தான் நாம் அடுத்த கட்ட அரசியலை சரி செய்யமுடியும்.

கடந்த காலங்களில் பலவிதமான பொருத்தங்களைத் தந்தும், வாக்குறுதிகளைத் தந்தும்,இரண்டு சமூகங்களும் எதிர்பார்த்த எல்லா இலக்குகளையும் அடையமுடியவில்லை. எல்லா இலக்குகளையும் அடைவதற்கான யதார்த்த பூர்வமான, உளப்பூர்வமான ஒரு முயற்சியையாவது, நாங்கள் ஆதரித்தவர்கள் செய்யவில்லை என்கின்ற ஓர் ஏமாற்றம் சிலர் மத்தியில் காணப்படுகின்றது.

இம்முறை தாங்கள் வேறு தீர்மானத்தை எடுத்து, தங்ளுடைய சார்பில் தனியாக ஒரு வேட்பாளரை நிறுத்திவிட்டு பேசுவதன் மூலம் தங்களுக்குத் தாங்களே, தங்களுடைய நீண்டகால அரசியல் அபிலாஷைகளுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி விடுவாரகளெனும் அச்சம் இன்று பரவலாக எழுந்திருக்கிறது.

தனி வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் அவருக்கான வாக்கு வீதம் வெகுவாக குறைந்து விட்டால், தமிழர் சமூகம் அப்படியே தங்களுடைய இலக்குகளை இனியும் அடையமுடியாமல் ஒழுங்கான மக்கள் ஆணை இல்லாமல் போய்விடும் நிலைமைக்கு வந்தவிடும் ஆபத்தும் நம் முன்னில் இருந்து கொண்டிருக்கின்றது.

இதற்காகத்தான் தமிழரசுக் கட்சி மிக யதார்த்தபூர்வமாக களநிலைவரங்களைச் சிந்தித்து எடுத்த தீர்மானம் குறித்து தமிழரசுக் கட்சியை நாம் வாழ்த்த வேண்டும்.

தமிழரசுக்கட்சி,முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் தமிழ்பேசும் மக்களுக்கு மத்தியில் ஒரு சிநேகபூர்வமான அரசியலை பல வருடகாலமாக செய்து வந்திருக்கின்றோம். குறிப்பாக ஜனாதிபதி தேர்தல் ஒன்றின்போது தீர்மானம் எடுக்கின்ற போது அந்த தீர்மானத்தில் நாங்கள் ஒருமித்து நிற்பதன் மூலம் மாத்திரம் தான் எங்களுடைய குறைந்தபட்ச அபிலாசைகளைப்பற்றிய திட்டவரைவுகளையாவது செய்து, அதற்கான முயற்சிகளை செய்யமுடியும்.

எனவேதான் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தோம் என்ற ஆணவத்தில், அகங்காரத்தில் மஹிந்த ராஜபக்ஷ 2010ஆம் ஆண்டு போட்டியிட்டபோது நாங்கள் ஓர் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவை தேர்தலில் நிறுத்தி இந்த வடகிழக்கு மண்ணில் 95 வீதத்துக்கும் அதிகமான மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தோம்.

எங்களுடைய தெரிவுகள் வெற்றியோ தோல்வியோ, தமிழர்களும் முஸ்லிம்களும் அதிகபட்ச ஆதரவை நாங்கள் கொடுத்தோம் என்பதற்கு பின்னால் உள்ள செய்தி, நாங்கள் ராஜபக்ஷவின் குடும்பத்தினருக்கான இன வாதத்தை

தொடர்ச்சி▼



# மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்துக்கு ஆப்பு வைத்தமை ரணிலின் முறையற்ற செயல்தான்

தொடர்ச்சி▲

நிராகரிக்கிறோம் என்பதாகும்.

அவர்களுடைய மிக மோசமான அரசியலை முழுமையாக நாங்கள் துவம்சம் செய்து விட்டோம் என்ற செய்தியை நாங்கள் சொன்னோம்.

அதற்குப் பின்பும் அடுத்த தேர்தலிலும் அதே மஹிந்த ராஜபக்ஷவை எங்களால் எல்லோரும் ஒருமித்து நின்றதன் மூலம் தோற்கடிக்க முடிந்தது. ஆனால், அந்தத் தேர்தலில் பிரதமராக வந்த ரணில் விக்கிரமசிங்க கொடுத்த வாக்குறுதிகளை குறைந்த பட்சம் இந்த அதிர்ஷ்டவசமாக கிடைத்த கதிரையில் உட்காரக் கிடைத்த சந்தர்ப்பத்தில் செய்திருந்தால் நாங்கள் குறைந்த பட்சம் அவரைப்பற்றிச் சிந்தித்திருக்கலாம்.

கடந்த இரண்டரை வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்து விட்டார் எனச் சொல்லும் இந்த ஜனாதிபதிக்கு கிடைத்த வாய்ப்பில் குறைந்த பட்சம் நடைமுறையில் இருந்து இன்று இல்லாமல் இருக்கின்ற மாகாண சபை தேர்தலையாவது நடத்தவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலையாவது நடத்தாத அவருக்கு உயர் நீதிமன்றம் அவர் வேண்டுமென்றே மக்களுடைய மனித உரிமையை மீறி இருக்கிறார் என்ற தீர்ப்பையும் கொடுத்துள்ளது.

நாடாளு மன்றத்தில் சுமந்திரன் எம்.பி. கொண்டுவந்த சட்டமூலம் மாகாண சபைக்கு இருக்கின்ற தேர்தல் முறையை மாற்றுவதற்கான விடயத்துக்கு ஜனாதிபதி ரணில் அவராக அங்கீகாரம் கொடுத்துவிட்டு, இப்போது சுமந்திரனின் கட்சி இத்தேர்தலில் தனக்கு ஆதரவு தரவில்லை என்ற காரணத்தினால், கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவையும் மீறி இன்று( 3ஆம் திகதி) நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலிருந்து மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை நீக்கச் செய்திருப்பதன்மூலம் நாடாளுமன்றத்தின் நடைமுறைகளை மாத்திரமல்ல, காலம் காலமாக இருந்து வந்த மரபுகளையும் மீறி ஒரு சர்வாதிகாரியாக நடந்து கொள்கின்றார்.

அவர் தோற்கப்போகும் தேர்தல் என்று தெரிந்தும் கூட, கடைசிக் கட்டதிலாவது தானாக செய்த பிழைக்கு பிராயச்சித்தமாக மாகாணசபைகளை மீண்டும் நிறுவதற்கான அந்த தேர்தல் முறைமாற்றத்துக்கான சட்ட மூலதத்தையும் இன்று வாக்கெடுப்புக்குவிடாமல் வேண்டுமென்று தடுத்தன் மூலம் தன்னுடைய சுயரூபத்தை ரணில் விக்கிரமசிங்க தமிழ் பேசும் சமூகங்களுக்கு வெளிக் காட்டியிருக்கின்றார்.

வடகிழக்கிலே தமிழர்களும் முஸ்லிம்களும் அதிகாரத்தை அனுபவிப்பதற்கு தங்களுடைய பிரதேசங்களில் சுயாட்சியை செய்வதற்கான குறைந்த பட்ச அதிகாரங்களையாவது கொண்டிருக்கின்ற மாகாணங்களையும் முழுமையாக செயலலிழக்கச் செய்து, அதை உயிர்ப்பிப்பதற்கான வாய்ப்பை நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்திருக்கிறார் என்பது அவருக்கு வக்காலத்து வாங்குகின்ற ஒருசிலருக்காவது படிப்பினையாக இருக்கவேண்டும் என்பதை நான் இங்கு சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

இந்தத் தேர்தல் எவ்வளவு முக்கியத்தவம் வாய்ந்ததென்பது ஒருபக்கமிருக்க, இந்தத் தேர்தலில் கடந்த காலங்களில் இந்த நாட்டில் ஜனநாயக ரீதியாக ஆட்சியை கைப்பற்ற முடியாது, ஆயுதம் தாங்கித்தான் – நாங்கள் கிளர்ச்சி செய்துதான் – ஆட்சியைப் பிடிக்க வேண்டுமென்று நாடு முழுக்க கொலைக் கலாசாரத்தை அறிமுகப் படுத்தி, மக்களுடைய ஜனநாயக உரிமையை பறித்த, தேர்தல்களைப் பகிஷ்கரித்த, தேர்தலில் பங்கெடுத்த கட்சிகளின் உறுப்பினர்களைக் கொன்றொழித்த ஓர் இடது சாரி இயக்கம் ஒரு புதிய முகமூடியுடன் வந்துள்ளது.

அவர்கள் புதிய முக மூடியுடன் இந்த நாட்டிலே ஒரு புது யுகம் படைக்கவேண்டமென்றால் ஒருமாற்றம் வரவேண்டுமென்றால் எங்களுக்கு ஆட்சியைத் தாருங்கள் என்று கேட்கின்றார்கள். அவர்களுக்கு இந்த நாட்டில் பொருளாதாரம் சமபந்தமாக பேசுவதற்கு இருக்கின்ற ஒரு விடயம் ஊழலை ஒழிப்போம் என்பது மாத்திரம்தான். ஆனால் எப்படி ஒழிக்கப் போகின்றார்கள் என்பதற்கான எந்தவொரு திட்டமுமே கிடையாது. இவர்களுக்கு அனுபவமுள்ள பொருளாதார நிபுணர்களே இல்லை.

இதேவேளை, சஜித் பிரேமதாஸவின் ஆளுமையைப் பற்றிச் சிலாகித்துப் பேசலாம். அவரது அணியில் பொருளாதார நிபுணர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, கபீர் ஹாசிம் எவரை எடுத்தாலும் நிதி அமைச்சராக நியமிக்கக் கூடிய – நாடறிந்தவர்களாக – உலகம் அறிந்தவர்களாக – இருப்பவர்களே உள்ளனர்.

ஒரேயொரு முறை திஸ்ஸமஹாராம பிரதேச சபையை ஆட்சி செய்ததைத் தவிர ,வேறு எங்கும் அதற்குப்பிறகு ஆட்சியை அவர்கள் கைப்பற்ற முடியவில்லை.

நாங்கள் வந்தால் ஊழல்காரர்களை சிறைத்தில் தள்ளுவோம் எனச் சொல்லுகின்றார்கள். ஆனால் அதற்கான சட்டதிட்டங்கள் வகுக்கப்படவேண்டும். சட்ட நடைமுறை கள் செய்யப்படவேண்டும். சட்டமா அதி பர் திணைக்களம் முழுமையான சுதந்திரமான திணைக்களமாக மாற்றப்பட வேண்டும்.

– இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தொடர்ச்சி▼

# 8 மாதங்களில் 13 கோடி ரூபாவிற்கும் அதிகமான தொகை அபராதம் விதிப்பு

நாடளாவிய ரீதியில் கடந்த 8 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது நுகர்வோர் விவகார அதிகார சபையினால் 13 கோடி ரூபாவிற்கும் அதிகமான தொகை அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 16 ஆயிரத்து 530 சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், 13 கோடியே 61 லட்சத்து 59 ஆயிரத்து 999 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பாண் தொடர்பாக ஆயி ரத்து 557 சோதனைகளும், அரிசி தொடர்பாக 2 ஆயிரத்து 382 சோதனைகளும்முன்னெடுக்கப்பட்டன என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

පාරිභෝගික කටයුතු පිළිබඳ අධිකාරිය
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
CONSUMER AFFAIRS AUTHORITY



# சில அத்தியாவசியப் பொருள்களுக்கு உச்சக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்

சில அத்தியாவசிய உணவுப் பொருள்களின் உச்ச கட்டுப்பாட்டு விலைகளை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 162 முதல் 184 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி 235 முதல் 264 ரூபா வரையிலும், ஒரு கிலோகிராம் பருப்பு 270 முதல் 303 ரூபா வரையிலும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராம் 180 முதல் 232 ரூபா வரையிலும், 400 கிராம் பால்மாவின் விலை 910 முதல் 1050 ரூபா வரையிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.



# யாழ். இந்திய துணைத் தூதுவர் சந்திரகுமாருடன் நேற்று பேச்சு

யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி, தூதரக சிரேஷ்ட அதிகாரி நாகராஜன் ஆகியோருக்கும் முன்னாள் நாடாளுன்ற உறுப்பினர் சந்திகுமாருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த யாழ் இந்தியத் துணை தூதரக அதிகாரி குழுவினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான முருகேசு சந்திரகுமாார், அக் கட்சியின் தலைவர் சு.மனோகரன் உள்ளிட்ட குழுவினரை சமத்துவக் கட்சி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையா டியுள்ளனர்சமகால அரசியல் நிலை மைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டன என சமத்துவக் கட்சி தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 05.09.2024




இன்றைய நாள் சுமூகமாகச் செல்லும். நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்கள் உங்கள் மீது நம்பிக்கையுடன் இருப்பார்கள். இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

பணியிடத்தில் உங்களுக்கு இனிமையான ஆச்சரியங்கள் காத்திருக்கும். நீங்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மூலம் பிரச்சினைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். கிடைக்கும் பணத்தை சிறந்த முறையில் பயன்படுத்துங்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் கடின முயற்சி மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

உங்கள் உறுதி மற்றும் நேர்மை காரணமாக உங்கள் பணிக்கு நல்ல பெயர் கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இருவரும் பயனுள்ள விஷயங்களை கலந்து ஆலோசிப்பீர்கள்.

கடன்கள் மூலம் சில பண வரவு காணப்படும். இதன் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக கொள்ளுங்கள்.




இன்று பொதுவாக மகிழ்ச்சி காணப் படும். நீங்கள் இன்றைய நாளை புதிய தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ள பயன்படுத்தலாம். பொது நிகழ்ச்சிகள் மற்றும் விருந்துகளில் கலந்து கொள்வது மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். உங்கள் பணிகளை விரும்பி செய்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமையை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தால் லாபமும் பயனும் அடைவீர்கள்.

ஆரோக்கியத்தைப் பொருத்தவரை இன்று சிறப்பான நாள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. சில சூழ்நிலைகள் உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும். மகிழ்ச்சியாக இருக்க முயலவும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும்.

இன்று உங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. எனவே எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




நீங்கள் அறிவுபூர்வமாக செயலாற்று வதன் மூலம் இன்று எழும் பிரச்சினைகளைக் கையாள இயலும்.இ ன்றைய நாள் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன்றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிகமாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.ஒவ்வாமை காரணமாக சளி இருமல் போன்ற தொல்லைகள் காணப்படும்.




இன்று சிறப்பாக நாளாக அமையும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். சகஜமான அணுகு முறை மூலம் எளிதாக இலக்கை அடையலாம்.உங்கள் பணியில் சிறந்த வெற்றி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். எந்த விஷயத்தையும் புது முறையில் ஆற்றுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் மகிழ்ச்சியான அணுகு முறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

கணிசமான பண வரவின் காரணமாக இன்று மறக்க முடியாத நாளாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் சேமிப்பதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று நீங்கள் சிறந்த முறையில் ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




நம்பிக்கையும் மன உறுதியும் இன்று மிகவும் அவசியம். தைரிய மின்மையால் பிரச்சினைகள் உரு வாகும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. கவனமுடம் பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். இது கோபமாக வெளிப்படும். இதனை உங்கள் துணையிடம் வார்த்தையில் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி பாதிப்படையும்.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் உங்கள் பணச் சுமை அதிகரிக்கும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படும். உடற்பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் அளிக் கும். புத்திசாலித்தனமாக யோசிப்பது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் வளர்ச்சி காண உகந்த நாள் அல்ல. குறித்த நேரத்தில் பணிகளை முடிக்கும் உங்கள் திறமைகளைக் குறைக்கும் வகையில் சில தடைகள் ஏற்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மிகுந்த உணர்சிவசப்படுவீர்கள்.சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. ஆன்மீக நோக்கத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

அதிக நீரைப் பருகி உங்களை ஆரோக்கியமாக வைத்திருங்கள். இதனால் வயிற்று உப்பசம் சீராகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.09.2024




எந்த ஒரு செயலையும் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் யோசித்துச் செயல்பட வேண்டும் உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. மனதில் குழப்பம் வேண்டாம். பிரார்த்தனை மூலம் வெற்றி கிடைக்கும்.

இன்று பணியில் வெற்றி காண்பது அரிது. பணியை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிடல் அவசியம்.

மனக் குழப்பம் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். காரணமேயில்லாமல் உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் செய்ய நேரும்.

இன்று பண விரயம் காணப்படும்.செலவுகளை கட்டுபடுத்த முடியாது. கவனமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பல் வலி காணப்படும். கண்களுக்கும் சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு திருப்தியை அளிக்கும்.

இன்று புதிய பணி வாய்ப்புகள் உங்களுக்கு அதிக திருப்தியை அளிக்கும். சாதித்த உணர்வு ஏற்படும்.

உங்கள் துணையுடன் கலந்தாலோசிக்க இது ஏற்ற நாள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று அதிக பண வரவு காணப்படும். ஊக்கத்தொகை வகையில் இன்று பண வரவைக் காணலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று முழுவதும் நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




எதிர்காலம் பற்றிய எண்ணங்கள் உங்கள் மனதில் ஓடும். இது அனை வரிடத்திலும் காணப்படும். முக்கியமான செயல்கள் செய்வதற்கு இன்று ஏற்ற நாள்.

பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். பணிகளை சுமூகமாகக் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். திருப்திகரமான நிலை காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சி நிலவும்.




வாக்குவாதங்கள் ஏற்படும் என்பதால் உரையாடுவதற்கு முன் கவனம் தேவை. சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணிகளை துல்லியமாகவும் தரத்துடனும் மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்துங்கள். சளி, முதுகுவலி போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.





